DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

Case No.CC 110/2021

Prosecution witness – PW 2

| | | |
|---|---|---|
| Name | : நாகேஸ்வரி | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| **Taluk** | **:** | **Age:** |

Accused absent. Petition filed u/s.317 Cr.P.C and allowed.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of _ 28.03.2024

முதல் விசாரணை:–

1. நான் மேலச்செல்வனூர் கிராமத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். அ.சா–1 ஐ தெரியும். எதிரியை தெரியும். இவ்வழக்கு சம்மந்தமாக தெரியும்.

2. கடந்த 17.04.2020 ந் தேதி காலை 08.15 மணியளவில் கரகத்தம்மன் கோவில் நானும், மகேஸ்வரி என்பவரும் பேசிக்கொண்டிருந்தோம்.

3. அப்போது குணசேகரன் வந்து மகேஸ்வரியை தரக்குறைவான வார்த்தைகளால் பேசினார். தேவிடியா முண்ட என்று அசிங்கமாக பேசினார். நான் விலக்கிவிட்டேன். தலைமுடியை பிடித்து இழுத்து மகேஸ்வரியை கீழே தள்ளிவிட்டார். மகேஸ்வரி கீழே விழுந்ததில் இடது காலில் ஊமைக்காயம் ஏற்பட்டது. மகேஸ்வரி கணவரும் வந்து சண்டையை விலக்கிவிட்டார்.

4. சம்பவத்தன்று நான் மகேஸ்வரியிடம் அவரது கணவரிடம் வழக்கு சம்மந்தமாக பேசிக்கொண்டிருந்த போது சம்பவம் நடந்தது. மகேஸ்வரியை அவரது கணவர் அழைத்துச்சென்றார். குணசேகரன் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டு சென்றுவிட்டார். மகேஸ்வரி மயக்கம் அடைந்தார். மறுநாள் மகேஸ்வரி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –

எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் போதுமான சந்தர்ப்பம் கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.